Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 26 2025

திங்கட்கிழமை 26, மே 2025 | ஒளி: 10 கதிர் 246 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE




‘இலங்கை சினிமாவின் ராணிக்கு’

## இன்று இறுதி அஞ்சலி

இலங்கை சிங்கள நடிகையும், நாடகக் கலைஞரும், இயக்குநரும். ‘இலங்கை சினிமாவின் ராணி’ என்று பெரும்பாலும் கருதப்படுபவருமான வன்னி ஆராச்சிகே மாலினி சினேகலதா பொன்சேகா, (மாலினி பொன்சேகா), கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 2025 மே 24 அன்று அதிகாலை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 78 ஆகும்.

புகழ் பெற்ற நடிகை மாலினி பொன்சேகாவின் இறுதிச் சடங்குகள், சுதந்திர சதுக்கத்தில் அரச கௌரவத்துடன் இன்று திங்கட்கிழமை (26) நடைபெறவுள்ளன.



# உகந்தமலையில் முளைத்த புத்தர் சிலை

■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலய கடற்கரைச் சூழலில் உள்ள மலை ஒன்றில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளதுடன், அதோடு ஒட்டியதாகப் பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

வருடாந்தம் முருகப் பெருமான் தீர்த்தமாடுகின்ற கடற்கரைச் சூழலில் கடற்படை முகாமுக்கு அருகே உள்ள மலையில் குறித்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. அங்குப் பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

உகந்தமலையில் நாங்கள் முருகன் சிலை ஒன்றை நிறுவ முற்பட்டபோது, அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், அதே சூழலில் இப் புத்தர் சிலை எவ்வாறு நிறுவப்பட்டது? என்று மக்கள் கோருகின்றனர். கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்றத் திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

இந்த விடயம் தொடர்பாக இந்துக்கள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

தொடர்ச்சி P2

ஐ.ம.ச. அமைப்பாளர்கள்

## அடுத்தடுத்து இராஜினாமா




எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்களில் மேலும் இருவர், அமைப்பாளர் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா தொகுதி அமைப்பாளர் அசோக சேபால தனது அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

தொடர்ச்சி P2



## நியூசிலாந்தின் துணை பிரதமர் வந்தடைந்தார்

நியூசிலாந்தின் துணை பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸ் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சனிக்கிழமை (24) இரவு நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

எதிர்வரும் 28ஆம் திகதி வரை அவர் நாட்டில் தங்கியிருப்பாரென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

“தாமதமான தீர்மானங்களால்

## மருந்துகளுக்கு தட்டுப்பாட்டு”

**“ மருந்துகளை வழங்கும் செயல்முறை மிகவும் சிக்கலான பணியாகும் என்றும், ஆரம்ப கட்டத்திலிருந்து மருந்துகளை கொள்முதல் செய்து விநியோகிக்க சுமார் 9 மாதங்கள் ஆகும் என்றும் அமைச்சர் கூறினார்**

**“ அறுவை சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையால் நோயாளர்களின் உயிர்களுக்கு கடுமையான ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது**

2024ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மருந்துகளை வாங்குவது தொடர்பாக சரியான முடிவுகளை எடுக்கத் தவறியதே தற்போது சில மருந்துகளின் பற்றாக்குறைக்குக் காரணம் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 2025ஆம் ஆண்டுக்கான மருந்துகளை வாங்குவதற்கு 67 வகையான மருந்துகளுக்கு மட்டுமே விலை மனு கோரப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த சில வருடங்களாக உற்பத்தி செயல்முறை நிறுத்தப்பட்ட 233 வகையான மருந்துகளுக்கான விலை மனுக்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டின் முதல் 5 மாதங்களில், 233 வகையான மருந்துகளுக்கான கொள்முதல் செயல்முறையை மருந்துக் கூட்டுத்தாபனம் நிறைவு செய்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “மருத்துவரை நாடுங்கள்”



சிக்குன்குனியா மற்றும் டெங்கு தொடர்பாக முறையான மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டு வருவதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை துணை அமைச்சர் டாக்டர் ஹன்சக விஜயமுனி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பிரசார நிதி அறிக்கை தொடர்பில் எச்சரிக்கை

மே 6ஆம் திகதி நடைபெற்ற 2025 உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட 75,589 வேட்பாளர்களில் 3,712 பேர், 49 அரசியல் கட்சிகள் மற்றும் 257 சுயேச்சைக் குழுக்கள் மட்டுமே தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் தங்கள் பிரசார நிதி அறிக்கைகளை சமர்ப்பித்ததாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் (IRES) நிர்வாக இயக்குநர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

மே 27ஆம் திகதிக்குள் அவ்வாறு செய்யத் தவறினால், 2023ஆம் ஆண்டின் பிரசார செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரகாரம், விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மாகாண சபை தேர்தல் தாமதமாகும்

மாகாண சபைத் தேர்தல்கள் சுமார் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்கவிடம் நாம் வினவியபோது, “மாகாண சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் இன்னும் தொடங்கப்படவில்லை” என்றார்.

இது தொடர்பாக இதுவரை எந்த விவாதமும் நடத்தப்படவில்லை என்று அவர் கூறினார்.

இருப்பினும், பல அரசியல் கட்சிகள் இப்போது மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகி வருவது புரிந்துகொள்ளத்தக்கது.

சில கட்சிகள் ஏற்கனவே தங்கள் முதலமைச்சர் வேட்பாளர்களை அறிவித்துவிட்டன. பல மாகாண சபைகளின் பதவிக்காலம் காலாவதியாகிவிட்டு பத்து ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது.

அரச நிறுவனங்களில்

## “இலஞ்ச கொத்தணி”

அரசாங்க நிறுவனங்களின் அதிகாரிகள் அல்லது ஊழியர்களால் செய்யப்படும் இலஞ்சம் (இலஞ்ச கொத்தணிகள்) அதிகரித்துள்ளதாக லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க தெரிவித்தார். இலஞ்சம் பெறப்பட்டு அனைவருக்கும் பகிரப்படுவதாகத் தகவல் வெளியாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் இரண்டும் கடுமையான குற்றங்கள் என்று கூறிய அவர், எதிர்காலத்தில் இலஞ்சம் வாங்குபவர்களும், இலஞ்சம் கொடுப்பவர்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என்றும் கூறினார்.

**“ இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் இரண்டும் கடுமையான குற்றங்கள் என்று கூறிய அவர், எதிர்காலத்தில் இலஞ்சம் வாங்குபவர்களும், இலஞ்சம் கொடுப்பவர்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என்றும் கூறினார்**

## தங்க முலாம் துப்பாக்கி: துமிந்தவுக்கு விளக்கமறியல்



தங்கமுலாம் பூசப்பட்ட T-56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான துமிந்த திசாநாயக்கவை, மே.29 வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை பதில் நீதவான் சாந்த குமார, சனிக்கிழமை (24) உத்தரவு பிறப்பித்திருந்தது.

அத்துடன், கொழும்பு நீதித்துறை மருத்துவ அதிகாரியிடம் பரிந்துரைத்த பின்னர், பொலிஸ் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் பெற்ற மருத்துவ அறிக்கைகளின்படி, சந்தேக நபரான துமிந்த திசாநாயக்கவின் உடல்நிலை மோசமடைந்து வருவதால், அவரை சிறைச்சாலை மருத்துவமனைக்கு அனுப்புமாறு பதில் நீதவான் மேலும் உத்தரவிட்டார்.


இந்நிலையில், துமிந்த திசாநாயக்கவின் வீட்டில் சமையல்காரராகப் பணியாற்றிய ஒருவரே இரண்டு பெண்களுக்கும் துப்பாக்கியைக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் வெள்ளவத்தை பொலிஸாரால் ருவன்வெல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

அந்த மூவரிடமும் பயங்கரவாத புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம், விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

‘ஹெவ்லொக் சிட்டி’ அடுக்குமாடிக் குடியிருப்பில் உள்ள பாதுகாப்பு காவலர் ஒருவர், T56 துப்பாக்கியுடன் வந்த பெண்ணொருவரை வைத்திருப்பதாக, செவ்வாய்க்கிழமை (20) அன்று 119 என்ற அவசர தொலைபேசிக்கு தகவல் கொடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# உகந்தமலையில் முளைத்த புத்தர் சிலை

பிரபல சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித்திடமும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

உகந்தமலையில் வள்ளியம்மன் மலையில் கடந்த காலத்தில் முருகன் சிலையை நிறுவுவதற்கு முன்னாள் கிழக்கு ஆளுநர் அமைச்சர்கள் முதல் ஆலய நிர்வாகத்தினர் முயற்சி செய்த போது அதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்த நிலையில், அதே சூழலில் உள்ள மற்றொரு மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருப்பது குறித்து இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இன மத பேதம் பார்க்கப்படாத இன்றைய அரசாங்கத்தின் கவனத்திற்கு இதனைக் கொண்டு வருகிறோம். உரிய நீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# "மருத்துவரை நாடுங்கள்"

"இலங்கையில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற சுகாதாரப் பிரச்சினை அதிகரித்து வருகிறது. காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு பொதுமக்களுக்கு நாங்கள் அறிவுறுத்தியுள்ளோம். இந்த இரண்டு நோய்களுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருக்கலாம். சிக்குன்குனியாவாகக் கருதப்பட்டால், அது டெங்கு நோயை மோசமாக்கும். எனவே, இந்த நேரத்தில் சரியான மருத்துவ ஆலோசனையை வழங்குவது மிகவும் முக்கியம் என்று பொதுமக்களுக்கு நாங்கள் கூறுகிறோம்" என்றார்.

# அடுத்தடுத்து இராஜினாமா

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஹொரொவபொத்தானை அமைப்பாளர் அனுர புத்திக்கவும் தனது அமைப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதேவேளை, மாத்தளை பிரதான அமைப்பாளர் வசந்த அலுவிஹாரே, தம்புள்ள பிரதான அமைப்பாளர் சம்பிகா விஜேரத்ன மற்றும் ரத்தோட்டை தொகுதி அமைப்பாளர் ரஞ்ஜித் அலுவிஹாரே ஆகியோர் ராஜினாமா கடிதங்களை சனிக்கிழமை(24) அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு பின்னர், பல மன்றங்களில் ஆட்சியை அமைப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இந்நிலையில், ஆசனங்களை பங்கிடுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச சரியான தீர்மானத்தை எடுக்கவில்லை என்றும் இதனால், உள்ளூராட்சி சபைகளின் ஊடாக முறையாக செயற்பட்டு, தங்களுடைய வாக்காளர்களுக்கு உரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்படலாம் என்று இராஜினாமா செய்தவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

# "தாமதமான தீர்மானங்களால் மருந்துகளுக்கு தட்டுப்பாட்டு"

அரசு மருத்துவமனை அமைப்பில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 65% நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன என்றும், 35% இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன என்றும் அமைச்சர் கூறினார்.

மருந்துகளை வழங்கும் செயல்முறை மிகவும் சிக்கலான பணியாகும் என்றும், ஆரம்ப கட்டத்திலிருந்து மருந்துகளை கொள்முதல் செய்து விநியோகிக்க சுமார் 9 மாதங்கள் ஆகும் என்றும் அமைச்சர் கூறினார்.

மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணி

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள பல அரசு மருத்துவமனைகளில் அவசர மருத்துவ சிகிச்சைக்கான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையால் நோயாளர்களின் உயிர்களுக்கு கடுமையான ஆபத்து ஏற்பட்டுள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணி தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையிலான இழுபறி மற்றும் நாட்டின் சுகாதார அமைப்பைப் பராமரிக்க அமைச்சக அதிகாரிகள் நேரடி முடிவுகளை எடுக்கத் தவறியதால், கடந்த ஆண்டை (2024) விட இந்த ஆண்டு (2025) தற்போதைய நிலைமை மருந்துப் பற்றாக்குறையை விட மோசமாக உள்ளது என்று கூட்டணியின் தலைவர் சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ கூறியுள்ளார்.

சுவாச நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகள், சக்திவாய்ந்த நுண்ணுயிர் எதிர்ப்பிகள், புற்றுநோய் நோயாளிகளுக்கு அத்தியாவசிய மருந்துகள், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகள், உயர் இரத்த அழுத்தம், இதய நோய், அதிக கொழுப்பின் அளவு, பிற தொற்றாத மற்றும் தொற்று நோய் கட்டுப்பாட்டு மருந்துகள், அறுவை சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் வடிகுழாய்கள் மற்றும் நூல்கள் போன்றவற்றுக்கு மருத்துவமனைகளில் கடுமையான பற்றாக்குறை இருப்பதாக மருத்துவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சுக்கு உள்ளேயும் வெளியேயும் பல நிர்வாக சிக்கல்கள் எழுந்துள்ளதால், மாநில மருந்தகக் கூட்டுத்தாபனம், மருந்து ஒழுங்குமுறை ஆணையம், மருத்துவ விநியோகப் பிரிவு மற்றும் மருந்து உற்பத்தி கூட்டுத்தாபனம் ஆகியவை முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் இல்லையெனில், நாட்டில் ஒரு பெரிய சுகாதார நெருக்கடி ஏற்படக்கூடும், மேலும் அனைத்து பொறுப்பான அதிகாரிகளும் இந்த சூழ்நிலையில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரசார நிதி அறிக்கை தொடர்பில் எச்சரிக்கை

பிரசாரச் செலவுச் சட்டங்களை மீறுபவர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை இழக்க நேரிடும், அத்துடன், அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குவாக்களிக்கவோ அல்லது தேர்தலில் போட்டியிடவோ முடியாமல் போகலாம் என்றும் கஜநாயக்க கூறியுள்ளார்.

ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனம் (IRES) 2024 முதல் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களால் ஏற்படும் பிரச்சாரச் செலவினங்களைத் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நான்கு பொதுச் செயலாளர்கள் தங்கள் பிரச்சார நிதி வருமானம்/செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்பது தெரியும் என்றும் கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களின் வேட்புமனுக்களை முன்மொழிந்த மூன்று பேர் தங்கள் பிரசார நிதி அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட மூன்று வேட்பாளர்கள் தங்கள் பிரசார நிதி வருமானம்/செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறிவிட்டதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

எல்பிட்டி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட 150 வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும், சுயேச்சைகளும் தங்கள் பிரசார செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை என்று தேர்தல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 8,361 வேட்பாளர்களில் 7,412 வேட்பாளர்கள் மட்டுமே தங்கள் பிரசார நிதி வருமானம்/செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்ததாக கஜநாயக்க கூறியுள்ளார்.

மேலும், 527 தேசியப் பட்டியல் வேட்பாளர்களில் 43 பேர் மட்டுமே தங்கள் பிரச்சார நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தனர்.

அந்த தேர்தலில் போட்டியிட்ட 690 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் 493 பேர் மட்டுமே சட்டப்பூர்வமா தேவைக்கு இணங்கினர்.

குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கும் செயல்முறையை அதிகாரிகள் விரைவுபடுத்துவது அவசியம் என்று கஜநாயக்க கூறியுள்ளார்.

பிரசார நிதிச் சட்டத்தை மீறியவர்கள் குறித்து தேர்தல் ஆணையம் பொலிஸாருக்கு தெரிவிக்கிறது. சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு பொலிஸார் சட்ட மா அதிபரின் கருத்தைப் பெறுவார்கள்.

மேலும் இது ஒரு நீண்ட, இழுபறியான செயல்முறையாகும்.

சம்பந்தப்பட்ட அனைவரும் தங்கள் தேர்தல் பிரசார வருமானம்/செலவு அறிக்கைகளை உரிய தேதிக்குள் சமர்ப்பித்து வழக்குத் தொடரப்படுவதைத் தவிர்ப்பது புத்திசாலித்தனம் என்றும் ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் (IRES) நிர்வாக இயக்குநர் மஞ்சுள கஜநாயக்க கூறியுள்ளார்.

# நியூசிலாந்தின் துணை பிரதமர் வந்தடைந்தார்

நியூசிலாந்தின் துணை பிரதமர், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், வெளிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் வர்த்தகம், முதலீடு, விவசாயம், கல்வி, தொடர்பாடல், சுற்றுலா மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான இருதரப்பு கலந்துரையாடல்களிலும் நியூசிலாந்து துணை பிரதமர் ஈடுபடவுள்ளார்.

நியூசிலாந்து துணை பிரதமருடன் அந்நாட்டு வெளிவகார மற்றும் வர்த்தக அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் மூவரும் இந்த விஜயத்தில் கலந்துகொண்டுள்ளதாக வெளிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் நியூசிலாந்தும் இலங்கையும் இருதரப்பு உறவை மேம்படுத்துவதில் கணிசமான பங்கை ஆற்றியுள்ளதாக நியூசிலாந்து அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**"நியூசிலாந்து துணை பிரதமரும் வெளிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸின் இந்த விஜயமானது அரசியல் ரீதியில் முக்கியத்துவம் மிக்கதும் இருநாடுகளுக்கிடையிலான உறவின் மேம்பாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதாக அமையுமெனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

நியூசிலாந்து துணை பிரதமரும் வெளிவகார அமைச்சருமான வின்ஸ்டன் பீற்றர்ஸின் இந்த விஜயமானது அரசியல் ரீதியில் முக்கியத்துவம் மிக்கதும் இருநாடுகளுக்கிடையிலான உறவின் மேம்பாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதாக அமையுமெனவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பகிடியை எதிர்த்த மாணவியை தாக்கிய மாணவன் கைது

கனகராசா சரவணன்

புதிதாக பல்கலைக்கழகம் வரும் மாணவர்களை பகிடிவதைக்கு உட்படுத்த வேண்டாமென தெரிவித்த சக பல்கலைக்கழக மாணவியின் கன்னத்தில் அறைந்த கிழக்கு பல்கலைக்கழக மாணவன் ஒருவரை வெள்ளிக்கிழமை (23) இரவு கைது செய்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தில் 3ம் ஆண்டில் கல்வி கற்று வரும் சிங்கள மாணவர்களுக்கிடையே புதிதாக பல்கலைக்கழகத்துக்கு வரும் மாணவர்களை பகிடி வதைக்கு உட்படுத்துவது தொடர்பாக வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போதே பகிடி வதைக்கு உட்படுத்த வேண்டாமென மாணவியொருவர் கூறியுள்ளார்.

அதன் பின்னரே அங்கிருந்த மாணவன், மாணவியின் கன்னத்தில் அறைந்துள்ளார்.

இதனால், அவஸ்தைக்கு உள்ளான மாணவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்து, குறித்த மாணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தங்க முலாம் துப்பாக்கி: துமிந்தவுக்கு விளக்கமறியல்



சொகுசு வாகனத்தில் வந்த அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் 68 வயதுடைய பெண் ஒருவர் குடியிருப்புக்குத் துப்பாக்கியைக் கொண்டு வந்தபோது, அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தின் தனியார் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி, அந்தப் பெண் கொண்டு வந்த பயணப் பையைச் சோதனைக்கு உட்படுத்தியபோது, அதில் துப்பாக்கி இருப்பதைக் கண்டு, அப்பெண்ணைத் தடுத்து வைத்துக்கொண்டு பொலிஸூக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஸ்தலத்துக்கு விரைந்த வெள்ளவத்தை பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர், தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கியைக் கைப்பற்றியதுடன், பெண்கள் இருவரைக் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆலையடிவேம்பில்

# அதிபர், ஆசிரியர் மீது வாள்வெட்டு

வி.ரி.சகாதேவராஜா

அம்பாறை - ஆலையடிவேம்பில் அதிபர், ஆசிரியர் மீது நடாத்தப்பட்ட வாள் வெட்டு சம்பவம் தொடர்பாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

எமது கல்வி வலயத்திற்குட்பட்ட திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபரும் ஆசிரியரும் 2025 மே 23 ஆம் திகதி கொடூரமான முறையில் தாக்கப்பட்டு, வெட்டப்பட்டுள்ளனர். இந்த சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம். இச்சம்பவம் மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

குறிப்பாக இக் கல்வியாளர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும், மாணவர்களின் நலனுக்காகவும் செயல்படும் வேளையில் இக் கொடூரமான செயலை கண்டிக்கிறோம். இத்தகைய வன்முறைகள் எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

இதுபோன்ற செயல்களுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அனைவருக்கும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான கல்விச் சூழலை உறுதி செய்வதற்காக ஒன்றிணைந்து செயல்படுவோம் என குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர் மீது நடத்தப்பட்ட வாள் வெட்டு தாக்குதலில் காயமடைந்த இருவரும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வெள்ளிக்கிழமை (23) மாலை அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரும் பொது மக்களின் உதவியுடன் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த பாடசாலையில் க.பொ.த.சாதாரண தரத்தில் குறித்த ஆசிரியரின் கீழ் கல்வி கற்கும் மாணவர்கள் சிலருக்கு வெள்ளிக்கிழமை (23) விசேட பயிற்சி செயலமர்வு வொன்று தம்பட்டையில் இடம்பெற்றது.

இந்நிலையில் அதிபரின் பணிப்பிற்கு அமைய சம்பந்தப்பட்ட மாணவர்களின் வீடுகளுக்கு பிற்பகல் வேளையில் சென்ற ஆசிரியர் பயிற்சி செயலமர்விற்குச் செல்வதற்கு அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை முன்பாக ஒன்று கூடுமாறு கூறியுள்ளார்.

இவ்வாறு சில மாணவர்களது வீட்டிற்குச் சென்று தகவலை வழங்கிவிட்டு இன்னொரு மாணவியின் வீட்டிற்குச் சென்று தகவலைச் சொல்ல முற்பட்ட நிலையில் அவ்வீட்டில் சலசலப்பு சத்தம் கேட்டுத் தான் சென்ற மோட்டார் சைக்கிளில் திரும்ப எத்தனித்துள்ளார்.

இந்நிலையில், அந்த வீட்டில் இருந்து வெளிவந்த ஒருவர், ஆசிரியரை வாளால் தாக்கி உள்ளதாக அதிபர் கூறினார்.

இதனையடுத்து, குறித்த ஆசிரியர் தனக்கு தகவலை வழங்கிய நிலையில் தானும் அவ்விடத்திற்குச் சென்றதாகவும் அங்கு ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை குறித்த நபர் உடைப்பதை அவதானித்ததாகவும் அதிபர் கூறினார்.

உடன் தான் ஆசிரியரைக் காப்பாற்றிக் கொண்டு செல்வதற்காகத் தனது மோட்டார் சைக்கிளில் ஆசிரியரை ஏற்றுவதற்கு முற்பட்டபோது தனது மோட்டார் சைக்கிளையும் உதைத்த நபர் வாளால் தன்னையும் தாக்கியதாக குறிப்பிட்டார்.

இதன் பின்னர் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் பாதுகாப்பற்ற நிலையில் ஆசிரியர்களும் அதிபர்களும் கற்பித்தல் நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபடுவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.












## புலமையாளர்களை கௌரவிக்கும் Sparkling Scholars-2024 விழா

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தின் முன்னணி பாடசாலைகளில் ஒன்றான கமு/கமு/ அல்– ஹிலால் வித்தியாலய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றுப் புள்ளிக்கு மேல் பெற்றுச் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் Sparkling Scholars – 2024 விழா

– நூருல் ஹுதா உமர்

# “உட்கார்ந்திருக்க சந்தர்ப்பம் இல்லை”

சுகாதாரத் துறையில் வசதிகள் மற்றும் தொழில்முறையை மேம்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், தாதியர்கள் தங்கள் பணியினை மனிதாபிமானத்துடன் நிறைவேற்ற வேண்டும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

3,147 தாதியர்களுக்கு நியமனங்களை வழங்கும் நிகழ்வு அலரி மாளிகையில் சனிக்கிழமை (24) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் இந்நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய,

“பொதுச் சேவையில் தாதியர்களாக இணைந்து, வாழ்க்கையில் புதிய பயணத்தைத் தொடங்கும் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். உலகின் மிக முக்கியமானதும் கௌரவமானதுமான தொழில்களில் ஒன்றில் நீங்கள் பிரவேசிக்கிறீர்கள்.

தாதியர் தொழில் என்பது மக்களுக்கு ஒரு அத்தியாவசியமான, தொழில் என்பதற்கு அப்பாற்பட்ட ஒரு மனிதாபிமான சேவையாகும். நாங்கள் யாராக இருந்தாலும் சரி, உங்கள் பாதுகாப்பை நம்பி, தேவைப்படும் நேரங்களில் நாங்கள் உங்களிடம் வருகிறோம்.

மருத்துவத்துவத்திற்கு மேலதிகமாக, உங்கள் புன்னகை, பேசும் விதம், உங்கள் கருணை மற்றும் உங்கள் அக்கறை மூலம் எங்கள் குணப்படுத்துதலில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் திறன் உங்களுக்கு உள்ளது.

நீங்கள் உங்கள் தொழிலில் பெரும் தியாகங்களைச் செய்து சேவையை வழங்குகிறீர்கள். இது உடல் ரீதியான தியாகம் மட்டுமல்ல, மன ரீதியான தியாகமும் கூட. உட்கார்ந்திருக்கச் சந்தர்ப்பம் இல்லை. நீங்கள் தூக்கமின்மையால் பாதிக்கப்படும் நேரங்கள் பல உள்ளன. அந்த தியாகங்கள் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையையும் பாதிக்கும். உங்கள் குடும்ப வாழ்க்கை, குடும்பத்தினருடனான உறவுகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடனான உறவுகள் அனைத்தும் உங்களை பாதிக்கின்றன. அது அவர்களையும் அதே வழியில் பாதிக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும் என்றார்.



## கெஹெல்பத்தர பத்மேவின் உதவியாளர்கள் கைது

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு தவறான தகவல்களை சமர்ப்பித்து 03 போலி கடவுச்சீட்டுகளைப் பெற்ற சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஆட்கடத்தல், கடத்தல் விசாரணைகள் மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய விசாரணையைத் தொடர்ந்து, மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 32 மற்றும் 51 வயதுடைய, மாளிகாவத்தை மற்றும் எஹெலியகொடவைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் கொஹுவல மற்றும் பத்தரமுல்லையில் உள்ள இரண்டு புகைப்பட நிறுவனங்களின் உரிமையாளர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர்கள், தற்போது வெளிநாட்டில் இருக்கும் ஒழுங்கமைக்கப்பட்டப்பட்ட குற்றவாளியான பத்மசிறி பெரேரா கெஹெல்பத்தர பத்மே என்பவரின் படத்தை வாட்ஸ்அப் மூலம் பெற்று, அவற்றைத் திருத்தி, போலியான தகவல்களுடன் கடவுச்சீட்டைத் தயாரிப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளனர்.

கெஹெல்பத்தர பத்மே 2014ஆம் ஆண்டு பெறப்பட்ட கடவுச்சீட்டை பயன்படுத்தி 2021ஆம் ஆண்டு வெளிநாடு பயணம் செய்ததாகவும், அந்த கடவுச்சீட்டு 2024இல் காலாவதியான போது, அவர் வெளிநாட்டில் இருந்தவாறு, அவரது புகைப்படம் மற்றும் தகவல்களைப் போலியாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு வழங்கி ஒரு நாள் சேவை மூலம் 2024ஆம் ஆண்டு மோசடியாக புதிய கடவுச்சீட்டையும், அவரது புகைப்படத்தை உள்ளிட்டு இரண்டு வெவ்வேறு பெயர்களில் 2025ஆம் ஆண்டு மேலும் இரண்டு கடவுச்சீட்டுக்களையும் பெற்றுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் நேற்று (23) கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆட்கடத்தல், கடத்தல் விசாரணைகள் மற்றும் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்துள்ளது.



மோட்டார் சைக்கிள் விபத்தில்

## மூன்று பிள்ளைகளின் தந்தை மரணம்


எம்.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் பகுதியில் நீர் வடிகால் வாய்க்காலில், மோட்டார் சைக்கிளுடன் விழுந்து, குடும்பஸ்தர் ஒருவர் சனிக்கிழமை (24) இரவு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட பரந்தன் விவசாய திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய கிளிநொச்சி 190 இலக்கத்தில் வசிக்கும், மூன்று பிள்ளைகளின் தந்தையான 36 வயதுடைய சோமு கஜேந்திர மூர்த்தி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் மரண விசாரணைக்காக மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## யானை தாக்கியதில் சிறுவன் மரணம்



திருகோணமலை, கோமரங்கடவெல - திக்கட்டுவ பகுதியில் சனிக்கிழமை (24) அதிகாலை காட்டு யானை தாக்கியதில் 8 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் தனது தந்தையுடன் அதிகாலை வேளையில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, திடீரென வீதிக்கு வந்த யானை சைக்கிளைத் தாக்கியுள்ளது.

இதன்போது தந்தை சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ளதாகவும் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த சிறுவனை யானை மிதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சட்டத்தரணிகளின் உணவில் புழுக்கள்

கனகராசா சரவணன், ரீ.எல்.ஜவ்பர்கான்



மட்டக்களப்பு, நகரில் சட்டத்தரணிகள் சிலர் பகல் உணவுக்காக பிரபல உணவகம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்த உணவில் புழுக்கள் காணப்பட்டதையடுத்து, அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைபாடுக்கமைய பொதுச்சுகாதார பரிசோதனைகள் குறித்த உணவகத்தை நிலையத்தை சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதன்போது, மனித பாவனைக்கு உதவாத, பழுதடைந்த, காலாவதியான சமைத்த பெருமளவிலான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு புளியந்தீவு பதில் பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.மிதுன் ராஜ் தெரிவித்துள்ளார்.

உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், சுகாதார அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருட்களும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

## பெலாரஸ் சென்றவருக்கு என்ன நடந்தது?



வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் முனைத்தீவு கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் வேலை வாய்ப்புக்காக பெலாரஸ் நாட்டிற்கு சென்ற நிலையில், அவர் அங்கு மரணமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. பின்னர் அவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என அவரது குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, அவரின் சகோதரன் விநாயகமூர்த்தி சசிகரன் கருத்து தெரிவிக்கையில்,

“எனது தம்பி விநாயகமூர்த்தி பகிரதன். கடந்த 2025.01.07ஆம் திகதி பெலாரஸ் எனும் நாட்டுக்கு தொழில்வாய்ப்புகாகச் சென்றார் திருகோணமலையைச் சேர்ந்த ஓர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் ஊடாக சட்டரீதியாக தான் அவர் பயணமானார். எனது அம்மா மரணித்து ஒரு வருடமான காலத்தின் பின்னர் மிகுந்த மன வேதனைக்கு உட்பட்டு மிகவும் சிரமத்திற்கு மத்தியில் தான் எனது தம்பி பெலாரஸ் நாட்டிற்கு சென்றிருந்தார்.

பெலாரஸ் நாட்டிற்குச் சென்ற அவர் அங்கு என்ன சுமைகள் இருந்தன என்பது தொடர்பாக எங்களுக்கு எதுவித தகவல்களையும் கூறவில்லை எப்போதும் போல என்னுடன் சிரித்து பேசிக்கொண்டே இருந்தார். அங்கு சிரமப்படுவதாக கூறவில்லை. இந்நிலையில் கடந்த 2025.04.06ஆம் திகதி அவர் அங்கு தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக தகவல் கிடைத்திருந்தது.

அந்த அதிர்ச்சியில் இருந்து எம்மால் இன்றும் மீள முடியாமல் இருக்கின்றது. நான் எனது தம்பி வெளிநாடு சென்ற ஆவணங்கள் அனைத்தையும் பிரதி செய்து கொண்டு பிரதேச செயலகத்தின் கடமைப்படுகின்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு உத்தியோகத்தரிடம் வழங்கியிருந்தேன். எனது சகோதரன் மரணம் அடைந்திருந்தால் அவருடைய பிரேதத்தை எனக்கு கொண்டு வந்து தருமாறு உரிய நாட்டிடம் தெரிவிக்குமாறு அந்த உத்தியோகத்தரிடம் தெரிவித்திருந்தேன். குறித்த ஆவணங்கள் அனைத்தையும் அவர்கள் வெளிநாட்டு தூதரகத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்கள். எனது தம்பிக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நான் பல அரசியல்வாதிகளிடமும் தெரிவித்திருந்தேன். இது தொடர்பாக ஒரு சிலர் எனது வீட்டிற்கு வந்து நிலைமையை விசாரித்து தகவல்கள் பெற்று சென்றார்கள். ஆனால், இன்று வரையில் எனது தம்பி தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

தம்பியை பெலாரஸ் நாட்டிற்கு அனுப்பிய முகவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவருடைய உடல் தகனம் செய்து விட்டதாக எனக்கு குறுஞ்செய்தி ஒன்றை மாத்திரம் அனுப்பி உள்ளார். மீண்டும் அவருடன் தொடர்பை ஏற்படுத்த முயன்ற போது அவர் எமது அழைப்புக்கு பதில் அளிக்கவில்லை என்றார்.

# தங்க வாயிலை நோக்கி நகர்வதை தடுக்கும் ‘இலஞ்ச பேய்’

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிக்க கூடிய வலிமையான ஆட்சியாளர்களையும், அறிவார்ந்த மக்களையும் கொண்ட ஒரு நாடு நிச்சயமாக முன்னேற்றத்தின் தங்க வாயிலை நோக்கி நகரும் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்கு ஒரு விரிவான சட்ட அமைப்பும், அந்தச் சட்டங்களைச் செயல்படுத்த ஒரு நடைமுறை வழிமுறையும் தேவைப்படும்.

இலங்கையில் லஞ்சம் தொடர்பான முக்கிய சட்டமாக 1954ஆம் ஆண்டின் இலஞ்ச ஒழிப்பு சட்டத்தை அடையாளம் காணலாம். அதைத் தொடர்ந்து, 1994ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க லஞ்சம் அல்லது ஊழல் விசாரணை ஆணையச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் மூலம் லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நிறுவப்பட்டது.

தற்போதைய ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, லஞ்சம் என்பது ஏதாவது ஒன்றைச் செய்ததற்காகவோ அல்லது செய்யாமல் இருந்ததற்காகவோ வெகுமதியாக வழங்கப்படும் தூண்டுதல் அல்லது பரிசு என வரையறுக்கப்படுகிறது. அதாவது, அது ஒரு தொகை பணமாகவோ, அசையும் அல்லது அசையாச் சொத்தாகவோ, வேலையாகவோ, ஒப்பந்தமாகவோ, பாலியல் சலுகைகளாகவோ அல்லது வேறு ஏதேனும் சாதகமான சலுகையாகவோ இருக்கலாம்.

வாகனங்களை உடனடியாக பதிவுசெய்து மாற்றுவதற்காக ஒரே நாளில் பொதுமக்களிடம் கிட்டத்தட்ட 4 மில்லியன் ரூபாய் லஞ்சம் வாங்கியதாக சந்தேகத்தின் பேரில் லஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட மோட்டார் போக்குவரத்துத் துறையின் நாரஹேன்பிட்ட கிளையின் பிரதி ஆணையர் உட்பட மூன்று பேர், கொழும்பு பிரதம நீதிமன்ற நீதவான் தனுஜா லக்மாலி வெள்ளிக்கிழமை (23) உத்தரவின் பேரில், ஜூன் 6ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காணி விவகாரத்தில் சுமுகமாகத் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்காக, இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்ப்பது முதல், விளையாட்டுத்துறை உள்ளிட்ட சகல முறைகளிலும் இலஞ்சத்துக்குக் குறைவே இல்லை. இலஞ்சம் கேட்பதும் குற்றம் கொடுப்பதும் குற்றமாகும். எனினும், தங்களுடைய அவசர வேலைகளை இழுத்தடிக்காமல் இலகுவாக செய்து முடித்துக்கொள்வதற்காக இலஞ்சம் கொடுக்கின்றனர்.

தேசிய ஊழல் எதிர்ப்பு செயல் திட்டத்தை, ஏப்ரல் 9ஆம் திகதியன்று வெளியிட்டு வைத்து உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை அன்றி ஒரு மனிதாபிமான கடமையாகும். ஊழல் அதிகாரிகளுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என குறிப்பிட்டிருந்தார்.

பாலியலை இலஞ்சமாகக் கேட்டவர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், அரச திணைக்களங்களில், ‘இலஞ்ச கொத்து’ இருப்பதாகவும், இலஞ்சத்தை வாங்கி, பிரித்துக்கொள்கின்றனர் என்றும் தகவல்கள் கசிந்துள்ளன.

ஆகையால், இலஞ்சம் வாங்குவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். என்பதுடன், இலஞ்சம் கொடுக்கக்கூடாது என்பது தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டவேண்டும். இலஞ்சத்தை ஒழிக்கவும் வேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப் போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# தமிழர் விடுதலைக்கான துரோகக் கோட்பாட்டின் முடிவு

லக்ஸ்மன்

இலங்கை ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலையான பின்னர் முகிழ்த்த தமிழ்த் தேசிய விடுதலைக்கான சிந்தனாவாதக் கோட்பாடுகளுக்கு இதுவரையில் சரியான வடிவம் கொடுக்கப்படாத நிலை உள்ளதா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. ஏனெனில், அதன் நோக்கத்தை அடைவதில் உள்ள இதுவரையான இழுபாடுகளே அதற்குக் காரணமாகும். அந்த வகையில்தான் சுதந்திர இலங்கையில் தமிழர்களின் அபிலாஷையைத் தமிழ்த் தேசியம் எய்தவில்லை என்ற முடிவு கிடைக்கும்.

தமிழர்கள் எதிர்பார்க்கின்ற விடுதலையை, உரிமையை வென்றெடுப்பதற்காக அகிம்சைப் போராட்டங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கம் பெற்ற ஜனநாயக அரசியல் கட்சிகளும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அதன் தோல்வி காரணமாகத்தான் ஆயுதப் போராட்டம் தோற்றம் பெற்றது. விடுதலை அமைப்புக்களின் தோற்றமும் தமிழ் மக்களின் அபிலாசை என்ற நோக்கத்தை அடைவதற்கான முயற்சியும் 80 வருடத்தை எட்டுகின்ற சுதந்திர இலங்கையில் கைகூடவில்லை.

தமிழ் மக்களின் சுயநிர்ணய விடயத்தினை அடைந்து கொள்வதற்காக 32க்கும் மேற்பட்ட ஆயுதப் போராட்ட அமைப்புகள் தோற்றம் பெற்றிருந்த, ஆனால், விடுதலைப்புலிகள் அமைப்பினால் ஏனைய இயக்கங்கள் அழித்து ஒழிக்கப்பட்டதும், அவை துரோகிகளாகக் காட்டிக்கொடுத்தவர்களாக, கொலைகாரர்களாக பட்டங்கொடுக்கப்பட்டு தமிழ் மக்களிடமிருந்து விரோதிகளாக விலக்கி வைக்கப்பட்டனர். ஏனைய ஆயுத அமைப்புகள் இணைக்கப்பட்ட ஏற்பாடான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் தாங்கள் செய்தவைகள் அனைத்தும் தவறு என விடுதலைப் புலிகளால் வெளிப்படுத்தப்பட்டதான அறிவிப்பாகவே கொள்ளப்படலாம். அத்துடன் முடிந்து போனதாகவே அதற்கு அர்த்தமிருந்தாலும் விடுதலைப் புலிகளின் மௌனிப்பின் பின்னர் மீண்டும் அது கையிலெடுக்கப்பட்டது வேடிக்கையானது.

ஏகாதிபத்திய சிந்தனையுடன் ஏனைய ஆயுத அமைப்புகளை முடக்குவதற்குக் கையாளப்பட்ட அதிகார வேட்கைகளும், அதற்காக உபயோகிக்கப்பட்ட ‘துரோகி’ என்ற பதப்பிரயோகமும், தமிழர் அரசியலை ஆக்கிரமித்து வழிப்படுத்தியிருந்தது. இதனால், அழிவுகளின் பாதையில் சொல்லொண்ணாத் துயரங்களின் மத்தியில் தமிழர்களைத் தள்ளியது. ஆயுதப் போராட்டத்தின் மௌனிப்பின் பின்னரும் கூட தமிழர் அரசியலில் இருந்தும், தமிழ் மக்களிடமிருந்தும் ‘துரோகி’ என்ற பதப் பிரயோகம் நீக்கப்படவில்லை. இன்று அப்பதப் பிரயோகம் தமிழர்களை, அவர்களின் அரசியல் இருப்பை நிர்க்கதியாக்கியுள்ளது என்ற கருத்துகள் உருவாகிவருவது இதற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

தங்கள் கருத்துக்கு முரணானவர்கள் அனைவரையும் ‘துரோகி’ என்னும் வரையறைக்குள் தள்ளி ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்கு அர்த்தம் புரியாத வகையில் இந்த பாசிசச் சிந்தனாவாத எழுச்சியின் வடிவமான ‘துரோகி’ என்ற பதப் பிரயோகம் இன்றும் தமிழ் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு மிக்க ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழர்களுடைய நீண்ட விடுதலைப் பயணத்தில் அகிம்சாப் போராட்டத்திலும் சரி, ஆயுதப் போராட்டத்திலும் சரி அதன் பின்னரான தமிழ் மக்களின் விடுதலைக்கான ஜனநாயக அரசியல் கட்சிகளின் உருவாக்கத்திலும் சரி, ஜனநாயகத்திற்கு முரணான வகையில் கருத்தியல் வாதங்களை ஏற்றுக்கொள்ள முடியாமல், சகித்துக்கொள்ள முடியாமல் துரோகிகள் பட்டங்களை வழங்கியிருக்கின்றது. இது தனிநபர் துரோகச் சிந்தனைகள் மூலம் தங்கள் அரசியல் இருப்புக்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக வெறும் வார்த்தை ஜால அரசியலால் நகர்த்தப்படுவது வேடிக்கையானது.

தமிழரின் பெயரால், தமிழ் இனத்தின் விடுதலையின் பெயரால், அரசியல் கசாப்புக் கடை நடத்தும் இன்றைய தமிழ் அரசியல் தலைமைகள் தமிழ் மக்கள் அனைவரையும் கருத்தியல் தெளிவும், கருத்தியல் சிந்தனையும், விமர்சன அரசியல் பற்றிய கோட்பாடுகளை ஆராயாமல் மறுதலிக்கும் போலித் தனமான நிலைப்பாடுடையவர்களாக வரலாற்றில் மாற்றிவருகிறது. இதை நிரந்தரமானதாகப் பதித்துக் கொள்வதற்குத் தூண்டப்படுகிறது. இது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள், விடுதலை இருப்பு, உரிமைகள் என ஒவ்வொன்றையும் சிதைத்து சின்னா பின்னப்படுத்தி வெறுமனே கதிரை அரசியல் அதிகார வர்க்கச் சிந்தனையின் பால் தமிழ் மக்களை மூழ்கடித்துள்ளது.

‘துரோகி’ என்ற சொல்லுக்கு அர்த்தம் புரியாமல், எத்தகைய கருத்தியல் யதார்த்தங்களையும் ஆராயாமல், தமக்குத் தாம் முடியாதவற்றை ‘துரோகம்’ என்றும், எதிர்வாதம் புரிபவர்கள் மீது நடைமுறை யதார்த்தங்களுக்குப் புறம்பான வகையில் கருத்தியல்களை முன்வைத்து பொது வெளிகளில் தனிநபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதே நேரத்தில், தேர்தல் காலங்களில் ‘துரோக’ அரசியல் மூலம் மிக மோசமான முறையில், ஒட்டுக் குழுக்கள், மண்டையன் குழு, அடிவருடிகள் பாசிசவாதிகள், பயங்கரவாதிகள், கொலைகாரர்கள், கடத்தல் காரர்கள், உரிமைகளை நிராகரிப்பவர்கள், சோரம் போனவர்கள் என்ற மாயாஜால வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டு மக்களைக் குழப்பி, தமிழ் மக்களின் காதுகளில் பூச்சுற்றி, கடுக்கன் பூட்டி தமிழ் விடுதலை அரசியல் அலங்கோலப்படுத்தப்படுகின்றது.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்த மௌனிப்புக்குப் பின்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைக்கப்பட்டது, அது சிதையச் சிதைய கை காட்டுவதற்கு யாருமற்றவர்களாகத் தமிழர்கள் அரசியல் பொது வெளியில் அரசியல் அனாதைகளாக விடப்பட்டனர். இதில் வேடிக்கை என்னவென்றால், இன்னமும் கூட்டமைப்பு இருப்பதாகவும் அதற்கான சின்னம் வீடு என்றுமே பெரும்பாலான தமிழ் மக்கள் நம்புவதுதான். யுத்த மௌனிப்பின் பின் உருவான அரசியல் பொது வெளியை தம்வசப்படுத்திக் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி, விடுதலைப் புலிகள் ஆயுதத்தை (துரோகி) கொண்டு மேற்கொண்ட வேலையைச் செய்யத் தொடங்கி தமிழர் அரசியல் மீது தமிழ் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும் சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றனர்.

போர் முடிந்து 16 ஆண்டுகளின் பின்னரும், நாம் எதையும் சாதிக்கவில்லை. அரசியல் அபிலாஷையை அடைவதில் ஒரு இம்மியும் நகரவில்லை என்பது புரிந்திருந்தாலும், சர்வதேசத்திடம் முறையிடுவோம், இந்தியாவிடம் முறையிடுவோம், மூன்றாம் தரப்பிடம் பேசுவோம், மீண்டும் ஒரு போராட்டம் வெடிக்கும், மேற்குலகமே அங்கீகரி எனப் பல்வேறு கோசங்களைத் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களுக்குக் கூறிக்கொண்டு தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழர் உரிமையின் பெயரால் ஒருவரை ஒருவர் தேர்தல் காலங்களில் தாக்கி எழுதும், பேசுவதும், துண்டுப்பிரசுர விநியோகமும் நடைபெறுகிறது. துரோகிகளுடன் கூட்டே இல்லையெனச் சபித்து மக்களை அணி திரட்டுகின்றனர். ஆனால், தேர்தல் முடிந்த பின்னர் தமிழ்த் தேசியத்தை வென்றெடுக்க ஓரணியில் செல்வோம் என்ற கருத்துகள் வெளிப்படுகின்றன. அதிகாரத்தைத் தக்கவைக்க எந்தப் பிசாசுகளுடனும் கூட்டுச் சேர்வதற்குத் தயார் என்கின்ற இந்தக் கருத்தியல் முரண் எதற்கு என்பதே இந்த இடத்தில் கேள்வியாகும்.

இத்தகைய போலித்தனமான அரசியல் மூலம், தமிழ் மக்களின் விடுதலையை இத் தலைமைகளால் வென்று கொடுக்க முடியுமா. இது எத்தனை காலத்திற்குத் தமிழர்களுடைய விடுதலைக்கான அரசியலாக இருக்கும் என்பதும் புரியாத புதிராக மாறுகிறது. இவ்வாறு தமிழர்களுக்கான விடுதலைப் போராட்ட அரசியலை ஒரு முடிவுக்குக் கொண்டு வராமல் தொடர்ச்சியாக இழுத்தடித்து வருவதிலேயே ஈடுபட்டுவரும் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் காலப்போக்கில் காணாமலாக்கப்படுவதே நடைபெற்றாக வேண்டும்.

எனவே, எவ்வித ஆவணமுமற்ற, திட்டமில்லாத, வாய்ச்சவாடல் விடும் இந்தத் தலைமைகள் தங்கள் அதிகாரங்களைத் தக்கவைப்பதில் சிந்திப்பார்களாக இருந்தால் தமிழர்கள் பலிக்கடாவாகி தீர்வின்றி, அடுத்த தலைமுறைக்கும் ஆறாத வடுவாக உரிமைப் போராட்டத்தை நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வடிவமாகக் கொண்டு நகர்த்தி விடுவர். எனவே இந்த நிலைமை மாற்றமடைய வேண்டுமாயின், அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான தீர்மானத்தின் அடிப்படையில், தமிழர்களுக்கான வேலைத் திட்டத்தை ஒரு பொது வரைபின் மூலம் முன் நகர்த்திச் செல்ல வேண்டும். அதற்கு எவரும் தயாரில்லாத நிலை தொடர்ந்தால், சிங்களத் தேசியம் தமிழ் மக்கள் மட்டில் எவ்வித கவலையும் கொள்ளாது என்பதுடன், தமிழர்கள் வெறுமனே குரைப்பவர்களே. அவர்கள் கடிப்பவர்கள் அல்ல என்ற முடிவையும் நிரந்தரமாக்கிக் கொள்ளும்.

உள்ளொன்றும் புறம் ஒன்றும் வைத்து தமக்குள்ளே குத்து வெட்டுக்கள் செய்வதும் கூட்டுக்குள்ளேயே கூட்டுச் சதி செய்து கூட்டுக்களை ஏமாற்றுவதும். “ஆறு கடக்கும் மட்டும் அண்ணன் தம்பி ஆற்றைக் கடந்தால் நீ யாரோ நான் யாரோ” என்று தங்கள் தங்கள் இருப்புக்களைப் பாதுகாப்பது தமிழர் நாம் கண்ட வரலாறு. இருந்தாலும், வரலாறு கற்றுத்தந்த பாடங்களை அனுபவங்களாகக் கொள்ளாத சமூகம் அழிந்து போகவேண்டியதும் வரலாற்றின் கட்டாயம். இதில் தமிழர்கள் விதிவிலக்கானவர்களா? இனிவரும் காலங்களிலேனும் விட்டுக் கொடுப்பும், விண் பிடிவாதமின்மையும், வெளிப்படைத்தன்மையும், தமிழரின் தமிழ்த் தேசிய அரசியல் அபிலாசை ஒன்றே இலக்கென்றும் நகரும் தமிழ்த் தேசிய அரசியலைக் காண்போம்.

ஏமாற்றுகளிலிருந்து வெளியேறி, இருப்பதில் ஒன்று என்ற சிந்தனையிலிருந்து விடுபட்டு,அடுத்து வரும் மாகாண சபைத் தேர்தலிலேனும் மக்கள் தெளிவுடன் முடிவுக்கு வருதல் நடைபெறட்டும். அரசியல் கட்சியை, அரசியல்வாதிகளை வழிப்படுத்துவதும் மக்களின் வேலை என்றவகையில் தமிழ்த் தேசிய அரசியல் வழிக்கு வரட்டும்.

## கடிதங்கள்

### நோய் பரவும் அபாயம்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் டெங்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலக நுழைவாயிலில் இருக்கும் பாதுகாப்பற்ற குப்பைத் தொட்டியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசி செல்வதால் மாடுகள் நாய்கள் அந்த குப்பைத் தொட்டியை அலங்கோலம் செய்து வருகின்றன.

கடந்த இரண்டு நாட்களாக விடுமுறை நாள் என்பதால் திங்கட்கிழமை (19) பணிக்கு வந்த அரச உத்தியோகத்தர்கள் குறித்த குப்பையைக் கண்டும் காணாமலும் விட்டுச் சென்றுள்ளனர்.

பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் வைத்தியசாலை, உணவகம், பொலிஸ் நிலையம், சமூர்த்தி நிலையம், வங்கி, பிரதேச சபை போன்றன காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்திற்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த குப்பையில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதால் நாய்கள் குப்பையைக் கிளறி வருகின்றன.

தமது அலுவலகத்திற்கு முன்னால் காணப்படும் குப்பையை சுத்தம் செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு சமூக அக்கறையுடன் சேவை செய்வார்கள் என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

– பு.கஜிந்தன்

# மீண்டும் சூடு பிடிக்கும் தேயிலை



ஏப்ரல் மாதத்தில் உங்களின் தேயிலை விளைச்சல் கடந்த ஐந்தாண்டு காலப்பகுதியில் பதிவாகியிருந்த உயர்ந்த பெறுமதியான 26.3 மில்லியன் கிலோகிராம் (Mnkg) எனும் உயர் பெறுமதியை பதிவு செய்திருந்ததாக ஆசியா சியாகா கொமோடிட்டீஸ் பிஎல்சி அறிவித்துள்ளது. தேயிலை விளைச்சலின் மூன்று வலயங்களும் பெருமளவு விளைச்சல் உயர்வை பதிவு செய்திருந்ததுடன், கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த 21.6 மில்லியன் கிலோகிராம் என்பதுடன் ஒப்பிடுகையில் 21 சதவீத உயர்வை இவ்வாண்டில் பதிவு செய்திருந்தது. இதற்கு முன்னதாக 2021 ஏப்ரல் மாதத்தில் 30 மில்லியன் கிலோகிராம் தேயிலை உற்பத்தி ஏப்ரல் மாதத்தில் பதிவாகியிருந்ததாக ஆசியா சியாகா அறிவித்துள்ளது.

ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதிக்கான தேயிலை உற்பத்தியும் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத உயர்வை பதிவு செய்து 88.3 மில்லியன் கிலோகிராம்களாக பதிவாகியிருந்தது. எவ்வாறாயினும், 2021ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் பதிவாகியிருந்த 104 மில்லியன் கிலோகிராம் தேயிலை விளைச்சலுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் பெறுமதி குறைவானதாக பதிவாகியிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

தாழ்நில தேயிலை விளைச்சல் பெருமளவு வளர்ச்சியை பதிவு செய்திருந்தன. குறிப்பாக 48.5 மில்லியன் கிலோகிராம்களிலிருந்து 51.6 மில்லியன் கிலோகிராம்களாக உயர்ந்திருந்தது. அதனைத் தொடர்ந்து உயர்நில தேயிலை விளைச்சல் 20.2 மில்லியன் கிலோகிராம்களாக பதிவாகியிருந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த 18 மில்லியன் கிலோகிராம்களுடன் ஒப்பிடுகையில் 17 சதவீத உயர்வு என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய நில தேயிலை விளைச்சல் 15 சதவீதத்தால் உயர்ந்து 16.4 மில்லியன் கிலோகிராம்களாக பதிவாகியிருந்தது.

இந்நிலையில், இலங்கையின் தேயிலை ஏற்றுமதியும் 2025 ஏப்ரல் மாதத்தில் சிறந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. மொத்தமாக 18.2 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏப்ரல் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தது. 2024 ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 1.82 மில்லியன் கிலோகிராம்கள் உயர்வாகும்.

ஃபோர்ப்ஸ் அன்ட் வோல்கர் வாராந்த ஆய்வின் பிரகாரம், மொத்த தேயிலை ஏற்றுமதியைத் தவிர்ந்து, ஏனைய பிரிவுகளில் வளர்ச்சி பதிவாகியிருந்தது. தேயிலை பொதிகள், தேயிலை பைகள் மற்றும் உடனடி தேயிலை போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளுக்கு பரந்தளவில் அதிகளவு கேள்வி நிலவியதை அவதானிக்க முடிந்ததாக தெரிவித்துள்ளது.

2025 ஏப்ரல் மாதத்தில் Free on Board (FOB) பெறுமதி ரூ.1,760.31ஆக உயர்ந்திருந்தது. இது 2024 ஏப்ரல் மாதத்தில் பதிவாகியிருந்த ரூ.1745.45 உடன் ஒப்பிடுகையில் ரூ.14.86 உயர்வாகும். நாணயப் பெறுமதியில் ஏற்றத்தாழ்வுகள் நிலவிய போதிலும், வெளிநாட்டு சந்தைகளில் உறுதியான வினைத்திறனை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2025 ஜனவரி முதல் ஏப்ரல் வரையான காலப்பகுதியில் மொத்தமாக 81.41 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2024இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 2.71 மில்லியன் கிலோகிராம்கள் உயர்வாகும். தேயிலை பொதிகள், தேயிலை பைகள் மற்றும் உடனடி தேயிலை போன்ற பிரிவுகளில் ஏற்றுமதி வளர்ச்சி பதிவாகியிருந்த போதிலும், மொத்த தேயிலை மற்றும் கிறீன் டீ போன்ற பிரிவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியை பதிவு செய்திருந்ததாக ஃபோர்ப்ஸ் அன்ட் வோல்கர் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச தேயிலை சந்தைகளில் நீண்ட கால அடிப்படையில் போட்டிகரத்தன்மையை பேணுவதற்கு, பெறுமதி சேர் தயாரிப்புகள் மற்றும் பன்முகப்படுத்தல் போன்றவற்றில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்பட வேண்டியமை முக்கியமானது என தொழிற்துறைசார் பகுப்பாய்வாளர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

ஈராக் பெருமளவு இலங்கை தேயிலையை இறக்குமதி செய்திருந்ததுடன், அதனைத் தொடர்ந்து லிபியா இரண்டாமிடத்திலும், ரஷ்யா மூன்றாமிடத்திலும் அமைந்துள்ளன. இதர இறக்குமதியாளர்களான ஐக்கிய அரபு இராஜ்ஜியம், துருக்கி, சிலி, சீனா, சவூதி அரேபியா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளும் இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்வதில் நாட்டம் காண்பித்திருந்தன.

# SLT-MOBITEL இலங்கையின் வேகமான 4G வலையமைப்பாம்




2024ஆம் ஆண்டின் இலங்கையின் வேகமான 4G வலையமைப்பாக SLT-MOBITELதெரிவு செய்யப்பட்டுள்ளது. இணைய பரிசோதனை மற்றும் பகுப்பாய்வில் சர்வதேச ரீதியில் ஈடுபட்டுள்ள Ookla இனால் இந்த அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. SLT-MOBITEL இன் சிறந்த வலையமைப்பு வினைத்திறன் மற்றும் டிஜிட்டல் சிறப்புக்கான அர்ப்பணிப்புக்காக, அண்மையில் பார்சலோனாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த MobileWorldCongress(MWC) 2025 நிகழ்வின் போது இந்த விருது வழங்கப்பட்டது.

நவீன தொழினுட்ப தீர்வுகளைக் கொண்டு, உயர் வலையமைப்பு அனுபவத்தை உறுதி செய்து, SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக, இலங்கையில் தனது வலையமைப்பு உட்கட்டமைப்பை விஸ்தரித்து வலுவூட்டுவதில் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்புடனான முதலீடுகள் மற்றும் முயற்சிகளின் பலனாக இந்த கௌரவிப்பு கிடைத்துள்ளது.

SLT Group தவிசாளர் கலாநிதி. மோதிலால் டி சில்வா குறிப்பிடுகையில், “MWC பார்சலோனாவில் கிடைத்துள்ள Ookla கௌரவிப்பினூடாக, இலங்கைக்காக உறுதியான டிஜிட்டல் உட்கட்டமைப்பை கட்டியெழுப்புவதில் SLT-MOBITEL காண்பிக்கும் மூலோபாய நோக்கு மீள உறுதி செய்யப்பட்டுள்ளது. தேசத்தின் டிஜிட்டல் மாற்றியமைப்பு பயணத்தை நாம் முன்னெடுக்கையில், தங்கியிருக்கக்கூடிய, அதிவேக வலையமைப்பினூடாக அத்தியாவசிய அடித்தளம் ஏற்படுத்தப்படுகிறது. புத்தாக்கம் மற்றும் சிறப்பு ஆகியவற்றுக்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை இந்த விருது மேலும் உறுதி செய்துள்ளதுடன், இலங்கையின் பரந்த டிஜிட்டல் உள்ளடக்க இலக்குகளுக்கு ஆதரவளிப்பதுடன், தொலைத்தொடர்பாடல் தொழினுட்பங்களில் முன்னிலையில் திகழ்வதை உறுதி செய்கிறது.” என்றார்.

விருது பெற்ற 4G வலையமைப்பு, நாடு முழுவதும் வளர்ந்து வரும் தொழினுட்பங்களுக்கான அணுகலை மக்கள்மயப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. SLT-MOBITEL இன் சிறந்த இணைப்புத்திறன், AI-இயங்கும் தீர்வுகளை பரவலாக ஏற்றுக்கொள்ள உதவியுள்ளது. இளைஞர்களுக்கான AI பயன்பாடுகளுக்கு சிறப்பு ஆதரவை வழங்கும் நிறுவனம் சமீபத்தில் அறிமுகப்படுத்திய புதுமையான ‘Hello AI’ தொகுப்பு, உற்பத்தித்திறன், கல்வி மற்றும் புதுமைக்காக AI தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த இளைஞர்களை அதிகாரம் அளித்துள்ளது. ஒவ்வொரு குடிமகனும் தொழில்நுட்ப சுழற்சியில் உள்ளடக்கியவராகவும், எப்போதும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப பயன்பாடுகளில் கல்வியறிவு பெற்றவராகவும் இருப்பதை உறுதி செய்வதன் மூலம் அறிவு நிறைந்த சமூகத்தை உருவாக்குவதற்கான SLT-MOBITEL இன் உறுதிப்பாட்டை இந்த தயாரிப்பு வலுப்படுத்துகிறது.

4G பிரிவில் முன்னிலை வகிக்கின்றமைக்கு மேலதிகமாக, SLT-MOBITEL, அதன் தற்போதைய 5G சோதனைக்கு முந்தைய முயற்சிகள் மூலம் அடுத்த தலைமுறை இணைப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புறங்களில் நிறுவனம் 5G சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது. இதன் மூலம் பயனர்கள் 5G தொழில்நுட்பத்தை அனுபவிக்க முடிந்தது. சமீபத்தில், SLT-MOBITEL சோதனை நிலைமைகளின் கீழ் 5Gbps ஐ விட அதிகமான வேகத்தை எட்டிய புதிய 5G மேம்பட்ட தொழில்நுட்ப சோதனைகளை நடத்தியது. இது இலங்கையை, பிராந்தியத்தில் தொலைத்தொடர்பு தொழினுட்பத்தில் முன்னணியில் திகழச் செய்துள்ளதுடன், நாட்டின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை, எதிர்காலத்தில் மேம்படுத்துவதில் SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது.

# ‘இலங்கை சினிமாவின் ராணி’



இலங்கை சிங்கள நடிகையும், நாடகக் கலைஞரும், இயக்குநரும். ‘இலங்கை சினிமாவின் ராணி’ என்று பெரும்பாலும் கருதப்படுபவருமான வன்னி ஆராச்சிகே மாலினி சினேகலதா பொன்சேகா, 1969ஆம் ஆண்டு தேசிய மாநில நாடக விழாவில் ‘சிறந்த நடிகை விருதை’ வென்றதன் மூலம் முதன்முதலில் பரவலாக அறியப்பட்டார்.

அதைத் தொடர்ந்து, 1980இல் ஹிங்கனா கொல்லா, 1982இல் ஆராதனா, 1983இல் யசா இசுரு ஆகிய படங்களுக்காக சரசவியா சிறந்த நடிகை விருதுகளை வென்றார்.

அவர் 140க்கும் மேற்பட்ட சிங்கள படங்களில் நடித்துள்ளார். சர்வதேச விருதைப் பெற்ற முதல் இலங்கை நடிகை மாலினி பொன்சேகா ஆவார். சர்வதேச விருதுகள், ஜனாதிபதி விருதுகள், சரசவிய விருதுகள் உட்பட பல விருதுகளை வென்றவர்.

ஏழு தசாப்தங்களாக நடித்து வந்த மூத்த நடிகையான இவர், 1968இல் திச லியன்சூரியாவின் புஞ்சி பபா திரைப்படத்துடன் இலங்கைத் திரைப்படத்துறையில் தனது வாழ்க்கையைத் தொடங்கினார். தொடர்ந்து பன்னிரண்டு முறை மிகவும் பிரபலமான நடிகைக்கான சிலிம் நீல்சன் மக்கள் விருதையும் வென்றதன் மூலம் சாதனை படைத்துள்ளார். 2010ஆம் ஆண்டில், ஆசியாவின் 25 சிறந்த திரைப்பட நடிகர்களில் ஒருவராக சி.என்.என் ஊடகத்தால் பெயரிடப்பட்டார். 1978ஆம் ஆண்டு பைலட் பிரேம்நாத் தமிழ்த் திரைப்படத்தில் சிவாஜி கணேசனுடன் இணைந்து கதாநாயகியாக நடித்தார்.

கடந்த 2010 ஏப்ரலில், மாலினி பொன்சேகா ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இவர் அளித்த வலுவான ஆதரவைப் பாராட்டி இந்தப் பதவி வழங்கப்பட்டது.

2010 ஏப்ரல் 22ஆம் திகதி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட மாலினி பொன்சேகா, 2015 ஜூன் 26ஆம் திகதி வரையில் அந்த பதவியை வகித்தார்.

நடித்த தமிழ்த் திரைப்படங்கள்

யார் அவள் (1976, மொழி மாற்றத் திரைப்படம்)

(1978 பைலட் பிரேம்நாத் (1978)

(1979) மல்லிகை மோகினி (1979)

பனி மலர்கள் (1981)

சர்வதேச விருதுகள்

1975 கௌரவ டிப்ளோமா சான்றிதழ்  9ஆவது சர்வதேச மாஸ்கோ திரைப்பட விழா - திரைப்பட தயாரிப்பாளர்கள்.

1977 கௌரவ தகுதி விருது சான்றிதழ் - சிறிபாலா மற்றும் ரன்மாணிகா  6ஆவது டெல்லி சர்வதேச திரைப்பட விழா

1989ஆம் ஆண்டு மிகவும் வெற்றிகரமான பெண்மணிக்கான ஜோன்டா சர்வதேச விருது - ஜோன்டா சர்வதேச அமைப்பு

வெள்ளி மயில் விருது - 39வது இந்திய சர்வதேச திரைப்பட விழா

1998 - கௌரவ விருது - சர்வதேச கூட்டுறவு சங்கம் களனி

ஜனாதிபதி விருதுகள்

1978 - சிறந்த நடிகை - பம்பாரு ஏத்தா,

1979 - சிறந்த நடிகை - எ டே இன் ஸ்பிரிங்,

1981 - சிறந்த நடிகை அர்தனா,

1985 - கலாசூரி விருது,

1996 - “விஸ்வ பிரசாதினி” கௌரவ விருது - இலங்கை திரைப்படத் துறைக்கு மாலினி பொன்சேகா ஆற்றிய பங்களிப்பிற்காக ஜனாதிபதியால் வழங்கப்பட்ட சிறப்பு விருது.



2014ஆம் ஆண்டு மாலினி பொன்சேகாவுக்கு பிரான்ஸில் ‘Deauville City Award’ வழங்கப்பட்டது.

2014ஆம் ஆண்டு மாலினி பொன்சேகாவுக்கு பிரான்ஸில் ‘Deauville City Award’ வழங்கப்பட்டது.

“நான் இன்று உண்மையிலேயே அன்பைத் தேடி வந்தேன். அன்பைத் தேடி வந்தேன். எனக்கு உண்மையிலேயே அந்த அன்பு இருக்கிறது, அதை எப்படி விவரிப்பது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்காக இந்த நேரத்தைச் செலவிட்ட ஒவ்வொருவரும் ஒரு மில்லியன் மதிப்புள்ளவர்கள். எனக்காக இந்த நிகழ்வில் பங்கேற்றதற்கு மிக்க நன்றி, நீங்கள் அனைவரும். சொல்ல நிறைய விஷயங்கள் உள்ளன. அது எதுவாக இருந்தாலும், அது எனக்கு ஒரே விஷயத்தைச் சொல்கிறது. நான் எப்போதும் அன்பை பெற்றிருக்கிறேன். நான் அன்பையும் கொடுத்திருக்கிறேன். நான் அதை நிறுத்த மாட்டேன். அந்த அன்பை எப்படியாவது பாதுகாப்பேன். உங்கள் அனைவரையும் நான் நேசிக்கிறேன். மிக்க நன்றி.”

இவையெல்லாம் அவர் தனது சமகாலத்தவர்கள் மற்றும் திரைப்படத் துறை நிபுணர்கள் குழு முன்னிலையில் பேசிய சில வார்த்தைகள்.

சினிஸ்டார் அறக்கட்டளையால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘ராணியின்’ 78ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தில் 2025 ஏப்ரல் 30ஆம் திகதி கொழும்பில் உள்ள நவலோகா மருத்துவமனை கேட்போர் கூடத்தில் பங்கேற்றபோது அவர் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்தார்.

கில்பர்ட் பொன்சேகா (தந்தை) சீலாவதி பொன்சேகா (தாய்) ஆகியோரின் மகளான வன்னி ஆராச்சிகே மாலினி சினேகலதா பொன்சேகா களனி, பேலியகொடையில் 1947 ஏப்ரல் 30ஆம் திகதி பிறந்தார்.

உபாலி சேனநாயக்க எனபவரை 1965ஆம் ஆண்டு திருமணம் முடித்தார். அவருடனான திருமண உறவு, 1973ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. அதன் பின்னர் 1986ஆம் ஆண்டு லக்கி டயஸ் என்பவரைத் திருமணம் முடித்தார். 2011ஆம் ஆண்டு மணமுறிவு ஏற்பட்டது.

மாலினி பொன்சேகா, கொழும்பில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், 2025 மே 24 அன்று அதிகாலை காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 78 ஆகும்.

புகழ்பெற்ற நடிகை மாலினி பொன்சேகாவின் இறுதி சடங்குகள், சுதந்திர சதுக்கத்தில் அரச கௌரவத்துடன் திங்கட்கிழமை (26) நடைபெறவுள்ளன.



மலையகத்தின் ஆளுமை மிக்கத் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் 5ஆம் ஆண்டு சிரார்த்த தினம் இன்று திங்கட்கிழமை (26) அனுஷ்டிக்கப்படுகின்றது. கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இதுபோன்ற நாளில்தான் மலையகத்தின் ஆளுமை மிக்கத் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் இவ்வுலகிற்கு விடைகொடுத்திருந்தார்.





# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 5ஆம் வருட சிரார்த்த தினம்

1964ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி பிறந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி தனது வாழ்க்கைக்கு விடை கொடுத்து இன்றுடன் 5 வருடங்கள் பூர்த்தியாகின்றது.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1964ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி இந்தியாவின் புதுக்கோட்டையில் முனாபுத்தூரில் பிறந்தார். கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரி மற்றும் இந்தியாவில் ஏர்காட்டில் மார்க் போர்ட் பள்ளியில் கல்வி பயின்றார்.

பின்னர் அமெரிக்காவில் பெடிசக் பல்கலைக்கழகத்தில் கோப்ரேட் மேனேஜ்மன்ட் (Corporate Management) என்ற உயர் கல்வியை கற்று இஸ்ரேலில் தொழிற்சங்கம் சார்ந்த கல்வியை முடித்தார்.

இவர் படிக்கும் காலத்தில் தன் தனித்துவத்தையும், அனுபவத்தையும் வைத்துக் கொண்டு தனது மக்களுக்கு தன்னால் இயன்றதைச் செய்ய வேண்டும் என்று எண்ணிய அமரர் ஆறுமுகன் தொண்டமான் 1990ஆம் ஆண்டு இலங்கைக்கு மீண்டும் திரும்பினார்.

இலங்கை வந்திறங்கிய ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் மனதில் அரசியல் ஆர்வம் மிகையாக இருந்த தருணத்தில் சௌமியமூர்த்தி தொண்டமான் வழியில் 1990ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து அரசியலில் தனது பணிகளைத் தொடர தனது பயணத்தை ஆரம்பித்தார்.

பின்னர் குறுகிய காலத்தினுள்ளே தனது துல்லியமான பேச்சாலும், நுணுக்கமான அறிவால் 1993ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளராகவும், 1994ஆம் ஆண்டு கட்சியின் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்று தனது அடுத்த கட்ட அரசியல் பயணத்தைப் பதிவு செய்தார். தொடர்ந்து அதே ஆண்டில் பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 72 ஆயிரம் வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றி கண்டு தனது அரசியல் பயணத்தைப் பாராளுமன்றம் நோக்கித் தொடங்கினார்.

அவரது வளர்ச்சி பாதையை ஒரு படி மேலே உயர்த்திட அடுத்தடுத்த வெற்றிகளுக்கு, அவரது ஆதரவாளர்களும், அவரது அன்பான மக்களும் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள் என்றே குறிப்பிட வேண்டும்.

1996ஆம் ஆண்டு 72 ரூபாவாக இருந்த தோட்ட தொழிலாளர்களின் நாள் சம்பளத்தை வரவு- செலவு திட்டத்தின் மூலம் 100 ரூபாவாக உயர்த்துவதற்கு ஒரு வார அடையாள வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

இக்கோரிக்கைக்கு அப்போதைய பெருந்தோட்டத்துறை அமைச்சர் செவிசாய்க்காத காரணத்தால் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை ஒன்றைத் துணிவோடு கொண்டுவந்ததன் மூலம் அன்றைய அரசிலே இருந்தாலும் அரசினை எதிர்ப்பதற்கான துணிவை அவர் வெளிப்படுத்தினார்.

1999ஆம் ஆண்டு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலஞ்சென்றதன் பின்னர், அப்போதைய ஜனாதிபதியான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அம்மையாருடன் இணைந்து சிறப்பாக செயல்பட்டு கால்நடை வள அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சைப் பொறுப்பேற்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் வெற்றிடத்தைத் திருப்திகரமாக நிறைவு செய்தார்.

2000ஆம் ஆண்டில் தொழிற்சங்கத்தின் தலைமையை ஏற்ற அவர் தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பள அதிகரிப்பதற்காக நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக 20% சம்பள அதிகரிப்பைப் பெற்றுக்கொடுத்தார்.

அதே ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் நான்கு ஆசனங்களைப் பெற்று அவ்வரசியலிலும் அரசினை நிர்ணயிக்கும் சக்தியாக அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் விளங்கினார்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் 17வது யாப்பு திருத்தம் முன்வைக்கப்பட்ட போது இந்திய வம்சாவளி மக்கள் தனி தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு இந்திய வம்சாவளி பிரதிநிதி ஒருவர் அங்கம் வகிக்கும் அந்தஸ்த்தை நிலைநாட்டினார்.

தொடர்ந்து, 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிட்டு அந்த அரசாங்கத்தில் வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினை பொறுப்பேற்று அரசியலில் ஒரு பொறுப்பு வாய்ந்த அமைச்சராக விளங்கினார்.

2002ஆம் ஆண்டு மீண்டும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 111 ரூபாவாக இருந்த தோட்டத்

**“ குறுகிய காலத்தினுள்ளே தனது துல்லியமான பேச்சாலும், நுணுக்கமான அறிவால் 1993ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளராகவும், 1994ஆம் ஆண்டு கட்சியின் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்று தனது அடுத்த கட்ட அரசியல் பயணத்தைப் பதிவு செய்தார்**

**“ 2011ஆம் ஆண்டு மீண்டும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 515 ரூபாய் சம்பள உயர்வையும் பெற்றுக்கொடுத்தார். கல்வியியல் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில் வாய்ப்புகள் என அவரின் பணிகள் தொடர்ந்தன**

தொழிலாளர்களின் நாட்சம்பளத்தை 147 ரூபாவாக உயர்த்தினார்.

இதனைத் தொடர்ந்து, அரசாங்கம் தனியார்த் துறைக்கு அறிவித்த சம்பள உயர்வு தோட்ட தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஹட்டன் மல்லியப்பு சந்தியில் 24 நாட்கள் சத்தியாகிரக போராட்டத்தை நடத்தினார்.

இந்த போராட்டத்தை ஏளனமாக விமர்சித்த எதிராளிகள் இறுதியாகப் போராட்டத்தில் தாமும் பங்குகொள்ள முன்வந்தனர். இதன் விளைவாகப் போராட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

2003ஆம் ஆண்டு இலங்கையில் இந்திய வம்சாவளியை சேர்ந்த மூன்று லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்குக் குடியுரிமை பெற்றுக் கொடுப்பதில் பாரிய இன்னல்களைச் சந்தித்து அந்த குடியுரிமையைப் பெற்றுக்கொடுத்த பெருமை இவரையே சாரும்.

மேலும், 2003ஆம் ஆண்டு மலையக மக்களின் பிரதான பிரச்சினையாக அமைந்த பிரஜாவுரிமை விடயத்தை இந்தியக் கடவுச்சீட்டு பெற்றவர்களையும் இலங்கை பிரஜைகளாக அங்கீகரிக்கும் விசேட சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்தார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு முதல் முறையாக 8 பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்குக் காரணமாக இருந்தார். 2005ஆம் ஆண்டு அமைச்சர் அவர்களின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கையால் 3,179 மலையக ஆசிரியர் நியமனமும் 500 தபால் சேவை ஊழியர்களும் 200 தொடர்பாடல் உத்தியோகத்தர்கள் பதவிகளும் கிடைக்கப்பெற்றது.

2006ஆம் ஆண்டு மீண்டும் அரசாங்கத்தில் இணைந்த ஆறுமுகன் தொண்டமான் இளைஞர் வலுவூட்டல் மற்றும் சமூக பொருளாதார அமைச்சைப் பொறுப்பேற்று, இளைஞர்களின் எதிர்காலத்தை நவீனமயப்படுத்தும் வேலைத்திட்டங்களை தொண்டமான் ஞாபகார்த்த மன்ற, பிரஜா சக்தி வேலை திட்டத்தினூடாக செயல்படுத்தி வந்தார்.

2006 - 2009 வரையிலான நான்கு ஆண்டுகளுக்கு மாத்திரம் முழு மலையக அபிவிருத்தி பணிகளுக்காக அண்ணளவாக பாரியளவு நிதி ஒதுக்கிச் செலவிடப்பட்டது. அதே ஆண்டில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 405 ரூபாய் சம்பள உயர்வை பெற்றுக்கொடுத்தார்.

2010ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டு 60 ஆயிரம் வாக்குகளைப் பெற்று முதன்மையாக விளங்கினார். இதனோடு கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சும் வழங்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு மீண்டும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 515 ரூபாய் சம்பள உயர்வையும் பெற்றுக்கொடுத்தார்.

கல்வியியல் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையங்கள், தொழில் வாய்ப்புகள் என அவரின் பணிகள் தொடர்ந்தன. இவரின் வழிகாட்டலின் கீழ் அதிகமாக மலையக ஆசிரியர்கள் உருவாகியுள்ளனர்.

அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் மலையக மக்களின் நலனுக்காக கடந்த 30 ஆண்டுகளாக பணியாற்றியவர். இவரது கனவு தோட்ட மக்களுக்கு 1000 ரூபாய் நாட்சம்பத்தை பெற்றுக்கொடுப்பதும், மலையக பல்கலைக்கழகத்தை உருவாக்குவதும் ஆகும்.

இதற்காக எத்தனையோ இன்னல்களுக்கு மத்தியில் அரசாங்கத்துடனும், தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அன்னாரின் அரசியல் வரலாற்றில் ஜாம்பவானாகவும், எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனவாகவும் திகழ்ந்தார். அரசியல் மற்றுமன்றி, அவரை சுற்றி இருப்பவர்களின் மனதைப் புரிந்து கொண்டு அன்பு காட்டுவதற்கு இவரிடம் எம் அன்னையே தோற்றுப்போய்விடுவார். அவரின் பேச்சைக் கேட்பதற்காக ஒரு கூட்டம் அவருக்கு ரசிகர்களாக இருந்தனர். அவர் பார்வையிலும், அன்பான சிரிப்பிலும் தான் இந்த மலையக கூட்டமே அவர் பின் இருந்தது. இவ்வாறு சூழலுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளும் இசைவாக்கத்தன்மை தான் இன்று இவரின் சகாப்தங்களாக இருக்கிறது.

இவர் 1986ஆம் ஆண்டு ராஜலட்சுமியை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு நாச்சியார் தொண்டமான், விஜயலக்ஷ்மி தொண்டமான், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் பாசமிகு தந்தையாகத் திகழ்ந்தார்.

இவ்வாறு மக்களின் நாயகனாக மனங்களில் வலம் வந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 2020ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி கொழும்பு பத்தரமுல்லையில் தனது வீட்டில் வைத்து எம்மை விட்டு இறைவனடி சேர்ந்தார். அன்னார் மரணமடையும் போது அவருக்கு வயது 56 ஆகும். அவர் இறக்கும்போது, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சராகவும் இருந்து வந்தார்.

ஆண்டுகள் பல கடந்தாலும் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் எம் மக்களுக்கு ஆற்றிய சேவைகள் நினைவு கூறப்படும்.

வெ.கோபிநாத் (இ.தொ.கா. ஊடகப்பிரிவு)

இந்தியா

### இந்தியாவில் கொரோனா தொற்று

# அதிகரிப்பு

இந்தியாவில், கடந்த 2 வாரங்களில் கொரோனா பாதிப்பு அதிகரித்து காணப்படுகிறது. எனினும், இது லேசான அளவிலேயே பாதிப்புகளை ஏற்படுத்தும் என வைத்தியர்கள் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், நாடு முழுவதும் 257 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. டெல்லி, மராட்டியம் மற்றும் கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் கொரோனா அதிகரித்துள்ளது.

கர்நாடகாவில் இதுவரை மொத்தம் 35 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பெங்களூரு நகரில் 32 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இந்நிலையில், கர்நாடகாவில் ஒயிட்பீல்டு பகுதியைச் சேர்ந்த 85 வயது முதியவர் ஒருவர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளார்.

கர்நாடகாவில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்து வரும் சூழலில், ஞாயிற்றுக்கிழமை (25) முதல் மக்களிடம் கொரோனா பரிசோதனை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.



இந்தியா


### 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான

# இடைத்தேர்தல் திகதி அறிவிப்பு

நான்கு மாநிலங்களில் வெற்றிடமாகவுள்ள உள்ள 5 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஜூன் 19ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் ஞாயிற்றுக்கிழமை (25) தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தின் இரண்டு சட்டப்பேரவைத் தொகுதிகள், கேரளா, மேற்குவங்கம், பஞ்சாப் மாநிலங்களில் தலா ஒரு பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடக்க இருக்கிறது. வாக்குகள் ஜூன் 23ம் தேதி எண்ணப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநிலத்தில், காடி தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர், கார்சந்த்பாய் பஞ்சாபாய் சோலங்கி மரணமடைந்ததைத் தொடர்ந்து அத்தொகுதி வெற்றிடமாக உள்ளது. மற்றொரு தொகுதியான விஸ்வதாரின் எம்.எல்.ஏ. பயானி பூபேந்திர கந்துபாய், தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து அத்தொகுதியும் வெற்றிடமாக உள்ளது.




கேரளாவின் நிலாம்பூர் தொகுதியின் தற்போதைய எம்.எல்.ஏ. பி.வி.அன்வர் இராஜினாமா செய்ததாலும், பஞ்சாப் மாநிலத்தின் லூதியான தொகுதி எம்.எல்.ஏ.குர்பிரீத் பஸ்ஸி கோகி மற்றும் மேற்குவங்கத்தின் காளிகஞ்ச் எம்.எல்.ஏ. நசிருத்தீன் அஹமது ஆகியோர் உயிரிழந்ததாலும் மேற்கூறிய மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளும் இடைத்தேர்தலைச் சந்திக்க இருக்கின்றன.

பிரித்தானியா

### 165 ஆண்டுகளுக்கு பிறகு

# பிரித்தானியாவுக்கு கைக்கடிகாரம் அனுப்பி வைப்பு

விபத்தொன்றில் சிக்கிய கப்பலில் இருந்து கிடைத்த கைக்கடிகாரம் சுமார் 165 ஆண்டுகளுக்குப் பிறகு பிரித்தானியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாண ஏரியில் கடந்த 1860ஆம் ஆண்டு லேடி என்ஜின் என்ற நீராவிக்கப்பல் சென்று கொண்டிருந்தபோது, புயலில் சிக்கி மற்றொரு கப்பல் மீது நீராவிக் கப்பல் மோதி ஏரியில் மூழ்கியுள்ளது. அந்த கப்பலில் இருந்த 300 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான அந்த பகுதியில், கப்பலின் உடைந்த பாகங்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் கண்டெடுக்கப்படும் பொருட்கள் அங்குள்ள அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பிரித்தானியாவைச் சேர்ந்த ஹெர்பர்ட் இங்க்ராம் என்பவரின் கைக்கடிகாரம் கடந்த 1992ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.



அந்த கைக்கடிகாரம் மிச்சிகன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், தற்போது 165 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த கைக்கடிகாரம் இங்கிலாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

### 24 மணி நேரத்தில்


# இரண்டு முறை ‘எக்ஸ்’ தளம் முடக்கம்

உலகப் பெரும்பணக்காரரும் எக்ஸ், ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா நிறுவனத்தின் தலைவருமான எலான் மஸ்க்குக்கு சொந்தமான எக்ஸ் தளம், சனிக்கிழமை (24) மாலை திடீரென முடங்கியது. இலங்கை நேரப்படி 6 மணிக்கு பின்பு நீண்ட நேரம் முடங்கியது. இதனால், சமூக வலைதளப் பயனர்களால் செயற்பட முடியவில்லை.

சர்வதேச அளவில் எக்ஸ் தளம் வெள்ளிக்கிழமை(23) முடக்கத்தை சந்தித்த நிலையில், இரண்டாவது நாளாக சனிக்கிழமை (24) மீண்டும் இந்த தொழில்நுட்பச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. புதிய தகவல்களைப் பதிவேற்ற முயற்சி செய்யும்போது, “ஏதோ தவறாகி விட்டது. மீண்டும் பதிவேற்ற முயற்சிக்கவும்” என்ற நிலைத் தகவலையே காட்டுகிறது.

முன்னதாக நேற்றும் சர்வதேச அளவில் எக்ஸ் தளம் பெரும் செயலிழப்பைச் சந்தித்தது.

இலங்கை நேரப்படி அதிகாலை 1 மணிக்கு இந்தச் சிக்கல் ஏற்பட்டது. பின்பு சிறிது நேரத்தில் பிரச்சினை சரிசெய்யப்பட்டது. கடந்த 24 மணி நேரத்தில் எக்ஸ் தளம் முடங்குவது இது இரண்டாவது முறை ஆகும்.



### ஐ.பி.எல்:

# பஞ்சாப்பை வென்ற டெல்லி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), ஜெய்ப்பூரில் சனிக்கிழமை (24) நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பஞ்சாப், அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் 53 (34), மார்க்கஸ் ஸ்டொய்னிஸின் ஆட்டமிழக்காத 44 (16), ஜொஷ் இங்லிஸின் 32 (12), பிரப்சிம்ரன் சிங்கின் 28 (18) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 206 ஓட்டஞ்க்களைப் பெற்றது. பந்துவீச்சில் முஸ்தபிசூர் ரஹ்மான் 4-0-33-3, விப்ராஜ் நிகம் 4-0-38-2, குல்தீப் யாதவ் 4-0-39-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 207 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய டெல்லி, சமீர் றிஸ்வி ஆட்டமிழக்காத 58 (25), கருண் நாயரின் 44 (27), லோகேஷ் ராகுலின் 35 (21), அணித்தலைவர் பப் டு பிளெஸியின் 23 (15), செதிகுல்லாஹ் அட்டலின் 22 (16), ட்ரிஸ்டன் ஸ்டப்ஸின் ஆட்டமிழக்காத 18 (14) ஓட்டங்களோடு 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் அர்ஷ்டீப் சிங் 4-0-35-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக றிஸ்வி தெரிவானார்.

இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸை பஞ்சாப் எதிர்கொள்ளவுள்ளது.



# ஐ.பி.எல்: பெங்களூருக்குத் திரும்பிய ஹேசில்வூட்



இந்தியன் பிறீமியர் லீக்கின் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூருவின் ஜொஷ் ஹேசில்வூட், அவ்வணியின் இறுதி லீக் போட்டிக்கு முன்பதாக குழாமுக்குத் திரும்பியுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதிக்குப் பின்னர் தோட்பட்டைக் காயம் காரணமாக பெங்களூருக்காக விளையாடியிருக்காத ஹேசில்வூட், ஐ.பி.எல் இடைநிறுத்தப்பட்ட பின்னர் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்பியிருந்தார்.

### இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்கான

# இந்தியக் குழாமில் அர்ஷ்டீப், சுதர்சன், நாயர்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்தியக் குழாமில் அர்ஷ்டீப் சிங், கருண் நாயர், சாய் சுதர்ஷன், ஷர்துல் தாக்கூர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதில் டெஸ்ட் குழாமொன்றில் சுதர்சன், அர்ஷ்டீப் ஆகியோர் இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்தியா இறுதியாக விளையாடிய அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடருக்கான இந்தியக் குழாமில் இடம்பெற்றிருந்த ஹர்ஷித் ராணா, ஸஃப்ராஸ் கான் ஆகியோர் இக்குழாமில் இடம்பெறவில்லை.

அணித்தலைவராக ஷுப்மன் கில் இடம்பெற்றுள்ளதோடு, உப அணித்தலைவராக றிஷப் பண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.




குழாம்: ஷுப்மன் கில் (அணித்தலைவர்), யஷஸ்வி ஜைஸ்வால், லோகேஷ் ராகுல், றிஷப் பண்ட் (உப அணித்தலைவர், விக்கெட் காப்பாளர்), துருவ் ஜுரேல் (விக்கெட் காப்பாளர்), இரவீந்திர ஜடேஜா, ஜஸ்பிரிட் பும்ரா, மொஹமட் சிராஜ், ஆகாஷ் டீப், பிரசீத் கிருஷ்ணா, சாய் சுதர்சன், அபிமன்யு ஈஸ்வரன், கருண் நாயர், நிதிஷ் குமார் ரெட்டி, வொஷிங்டன் சுந்தர், ஷர்துல் தாக்கூர், அர்ஷ்டீப் சிங்.

# ‘கழக உலகக் கிண்ணத்தில் றொனால்டோ விளையாடலாம்’

கழக உலகக் கிண்ணத் தொடரில் கிறிஸ்டியானோ றொனால்டோ விளையாடுவது குறித்து கலந்துரையாடல்கள் இடம்பெறுவதாக சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜியானி இன்ஃபான்டினோ தெரிவித்துள்ளார்.

றொனால்டோவின் சவுதி அரேபியக் கழகமான அல்-நஸாரானது கழக உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறவில்லை. பிரேஸிலியக் கழகமொன்று 40 வயதான றொனால்டோவைக் கைச்சாத்திடும் நகர்வை மேற்கொண்டதாகக் கூறப்பட்டிருந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 26, மே 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.